**தலைப்பு 268 – கிளிநொச்சி மாவட்டச் செயலகம்/ கச்சேரி தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

கிளிநொச்சி மாவட்டச் செயலகம், தலைப்பு – 268 இன் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஒக்தோபர் 26 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல்வாங்கல்கள் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகளிலுள்ள ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

மாவட்டச் செயலகத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 210.60 மில்லியன் தொகையானதுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 206.84 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, தேறிய நிதியேற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 3.76 மில்லியன் தொகை அல்லது தேறிய நிதியேற்பாடுகளில் 1.78 சதவீதமாக இருந்தது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 173.60 | 170.57 | 3.03 | 1.74 |
| மூலதனம் | 37.00 | 36.27 | 0.73 | 1.98 |
| மொத்தம் | **210.60** | **206.84** | **3.76** | 1.78 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மூலம் கிடைத்த நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு நடவடிக்கைகளிற்காக 17 அமைச்சுக்கள் மற்றும் 14 திணைக்களங்களிடமிருந்து ரூபா 374.10 மில்லியன் கூட்டுமொத்தமான நிதியேற்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன் அதில், ரூபா 340.35 மில்லியன் கூட்டுமொத்தமான தொகைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதன்படி, சேமிப்பு ரூபா 33.75 மில்லியனாக இருந்ததுடன் இது பெறப்பட்ட மொத்த நிதியேற்பாடுகளில் 9.02 சதவீமாக இருந்தது.

**2.2 முற்பணக் கணக்கு**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 13.38 | 7.82 | 8.38 | 11.71 | 47.00 | 37.34 |

**2.2.2 கட்டுநிதிக் கணக்கு**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் 7002/0000/00/0286/0015/00 ஆம் இலக்க கட்டுநிதி கணக்கின் மீதி ரூபா 24.35 மில்லியன் தொகையாகும்.

**2.3 பொது வைப்புக் கணக்கு**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 08 வைப்புக் கணக்குகளின் மொத்த மீதி ரூபா 31,277,944 ஆகும். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இல. | தொகை |
|---|---|
| | ரூபா |
| 6000/0000/000/0002/0116/00 | 50,000 |
| 6000/0000/000/0013/0076/00 | 537,946 |
| 6000/0000/000/0016/0064/00 | 15,274,909 |
| 6000/0000/000/0017/0019/00 | 5,151,030 |
| 6000/0000/00/0018/0076/00 | 1,726,900 |
| 6000/0000/00/0020/0010/00 | 8,537,159 |
| **மொத்தம்** | **31,277,944** |

**2.4 கணக்காய்வு அவதானிப்பு**

2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களிற்குட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் கணிசத்தன்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. கணிசத்தன்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 கணக்குகளின் சமர்ப்பிப்பு**

மாவட்டச் செயலகம் 2016 மார்ச் 31 அளவில் கணக்காய்விற்காக வருமான கணக்கை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் கணக்கானது 2016 ஒக்தோபர் 31 வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

மாவட்டச் செயலகம் பின்வரும் பதிவேடுகளைப் பேணியிருக்காத அதேநேரம் குறித்த சில ஏனைய பதிவேடுகளை முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணியிருக்கவில்லை என கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| **பதிவேடுகளின் வகை** | **உரிய பிரமாணம்** | **அவதானிப்புகள்** |
|---|---|---|
| கட்லொக் புத்தகங்கள் | கச்சேரி கைநூல் 5:9 | பேணப்பட்டிருக்கவில்லை |
| இழப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை |
| தொலைபேசிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1), 846(3) | பேணப்பட்டிருக்கவில்லை |
| கொள்வனவு நேர அட்டவணை (பிரீஎஸ்) | 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.2 ஆம் பிரிவு | பேணப்பட்டிருக்கவில்லை |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2004 பெப்ரவரி 24 இன் 01/2004 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |
| கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான பதிவேடு | 2002 நவம்பர் 28 இன் ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.3.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நான்கு மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 16,800,000 ஆரம்ப நிதியேற்பாடு ஆறு சந்தர்ப்பங்களில் 10 சதவீதம் தொடக்கம் 25 சதவீதத்தால் குறைக்கப்பட்டிருந்த அதேநேரம் ஏனைய ஐந்து மீண்டெழும் நிதியேற்பாடுகள் 8.3 சதவீதம் தொடக்கம் 40 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தன. ஆகையால், முறையான நிதித் திட்டமில்லாமல் செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததை இது வெளிப்படுத்தியது.

(ஆ) மீண்டெழும் செலவின விடயத்திற்கான மொத்தத் தேறிய நிதியேற்பாடுகளில் ரூபா 110,448 கூட்டுத்தொகையான அல்லது 14 சதவீத சேமிப்புக்களின் மாற்றத்திற்கான திருப்திகரமான காரணங்கள் தரப்பட்டிருக்கவில்லை.

### 3.4 கட்டுநிதிக் கணக்கு

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் கரைச்சி பிரதேச செயலகம் என்பவற்றின் புத்தகங்களிலிருந்து முறையே ரூபா 13,494,230 மற்றும் ரூபா 1,002,100 கூட்டுத்தொகையான தீர்க்கப்படாத கட்டுநிதி இனங்காணப்பட்டிருந்தது. வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டிருக்காத போதிலும் ரூபா 14,496,330 கூட்டுத்தொகையான 09 காசோலைகள் 06 ஒப்பந்தகாரர்களின் பெயர்களில் வரையப்பட்டு கட்டுநிதி மீதியினை திறைசேரிக்கு அனுப்பிவைக்காமல் செயலகங்களில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன் 09 மாதங்களிற்கு மேலாக 2016 செப்தெம்பர் 30 வரையிலும் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளாக காட்டப்பட்டிருந்தன.

### 3.5 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

ரூபா 380,957 கூட்டுத்தொகையான 15 எண்ணிக்கையான நிறுத்திவைத்தல் பணம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 24 தொடக்கம் 28 மாதங்கள் வரையான காலவீச்சில் பொதுவைப்புக் கணக்கில் நிறுத்திவைப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தன.

### 3.6 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு

26801 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் இலக்க அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் பதவி வறிதாக்கப்பட்ட 03 உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 649,195 கூட்டுத்தொகையான நிலுவை மீதியினை அறவிடுவதற்கோ அல்லது தேவையான சீராக்கங்களை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 500(1) இற்கு முரணாக மீளாய்வாண்டிற்காக கட்டுநிதி பெற்றுக்கொள்ளப்படாமல் கரைச்சிப் பிரதேச செயலகத்தால் ரூபா 649,550 கூட்டுத்தொகையான கடன் மற்றும் முற்பணங்களின் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

மாவட்டச் செயலகத்தின் சொத்துக்களின் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திடமிருந்து பெறப்பட்ட ரூபா 281,679 பெறுமதியான நான்கு இலத்திரனியல் மற்றும் கணனி பொருட்கள் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்கு ஏற்கனவே கிடைக்கப்பெற்றிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 124,290 பெறுமதிக்கு அதே பொருட்கள் மீண்டும் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததை கணக்காய்வில் நியாயப்படுத்த முடியாதிருந்தது.

**3.8 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | |
| (i) | நிதிப்பிரமாணம் 94(2) | 811,437 | 57 எண்ணிக்கையான பொறுப்புக்களிற்கான சுயாதீன உறுதிப்படுத்தல்கள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 115 | 4,600,165 | மீளாய்வாண்டின் போது அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரிடமிருந்து மாவட்டச் செயலாளரூடாக அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் 4 தொடக்கம் 7 மாதங்கள் கடந்த பின்னர் கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் வெள்ள நிவாரணத்திற்கு உதவியளித்தல் தொடர்பிலான 2014 ஆம் ஆண்டிற்கான இருபது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (iii) | நிதிப்பிரமாணம் 504(1) | 37,342,597 | மாவட்டச் செயலகத்தினாலும் நான்கு பிரதேச செயலகங்களினாலும் மீளாய்வாண்டிற்கான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் காலாண்டுரீதியான கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | நிதிப்பிரமாணம் 565(3) | | மாவட்டச் செயலகத்தினாலும் நான்கு பிரதேச செயலகங்களினாலும் மீளாய்வாண்டிற்கான பொது வைப்புக் கணக்கின் சமப்படுத்தல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ)** | **அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவை** | | |
| | 8.13.4 ஆம் வழிகாட்டி | 1,479,027 | பொருளாதார நிலையம் - கனகபுரம் உள்நுழைவு வீதி வேலைகள் மீதான நிச்சயமின்மைகளிற்கான மதிப்பீட்டில் 25 சதவீத முரண் மீளாய்வாண்டிற்கான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.9 உள்நாட்டு நிதியீட்டத்தின் கீழான செயற்திட்டங்களின் அமுலாக்கல்

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது வெளிப்படுத்தப்பட்ட ஆரம்பிக்காது கைவிடப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கலிலுள்ள தாமதங்கள் என்பவற்றின் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

### (அ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலுள்ள தாமதங்கள்

(i) ரூபா 8,139,200 கூட்டுத்தொகையான பெறுமதியுடைய ஐந்து காசோலைகள் 03 ஒப்பந்த வேலைகளிற்காக 2015 திசெம்பரின் இறுதிக் கிழமையில் வரையப்பட்டு உரிய ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்படாமல் கையிலிருந்தன. 2016 ஒக்தோபர் 25 வரையிலும் அத்தகைய வேலைகளை ஆரம்பித்து பூர்த்தி செய்வதற்கும் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கடை கொள்வனவு முறையின் கீழ் ரூபா 5,943,336 ஒப்பந்தப் பெறுமதிக்கு பொருளாதார நிலையம் - கனகபுரம் உள்நுழைவு வீதியின் புனரமைப்பு வேலைகள் மீளாய்வாண்டின் போது ஒப்பந்தகாரரொருவருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் மதிப்பீட்டின் பிரகாரம் கிரவல்கள் மீது திருப்திகரமாக தாரிடப்பட்டிருக்காததுடன் புற்கள் வளர்ந்திருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் மதிப்பீட்டின் பிரகாரம் வீதியின் சமமான தன்மை நியமிக்கப்பட்ட வரையிருக்கவில்லை. மேலும், தேசிய போட்டிக் கூறுவிலைகளின் கீழ் கொள்வனவு செய்யப்படாமைக்கான காரணம் மற்றும் வேலைகளிற்காக பதிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தர்களின் விபரங்கள், உரிய நேரத்தில் பெறப்பட்ட கூறுவிலைகளின் விபரம் என்பன கணக்காய்விற்காக கிடைக்ககூடியதாக இருக்கவில்லை. எவ்வாறாயினும், இந்த நிலையத்தின் நிர்மாணக் கிரய விபரம் மற்றும் ஆரம்பிக்காமைக்கான காரணம் என்பனவற்றை பொதுமக்கள் பாவனைக்காக ஆக்கபூர்வமானதாக மேற்கொள்வதற்கான அர்த்தமுள்ள நடவடிக்கை 2016 ஒக்தோபர் 25 வரையிலும் கணக்காய்விற்காக கிடைக்ககூடியதாக இருக்கவில்லை.

## 3.10 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது சமைத்த உணவுகள் விநியோகத்திற்காக சிட்டைகளில் குறிப்பிடப்பட்ட தொகைக்கும் கண்டாவளை பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்கும் இடையே 09 சந்தர்ப்பங்களில் ரூபா

215,233 வித்தியாசம் அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் வித்தியாசங்களிற்கான காரணம் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பரில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களிற்காக வழங்கப்பட்ட பொருட்களின் விநியோகஸ்தர்களின் பெயர்களிற்குப் பதிலாக நிதிப்பிரமாணம் 138(3) இற்கு முரணாக மீளாய்வாண்டின் போது கண்டாவளைப் பிரதேச செயலகத்தின் 05 கிராம சேவையாளர்களின் தனிப்பட்ட பெயர்களில் ரூபா 1,936,840 கூட்டுத்தொகையான பெறுமதியுடைய பன்னிரண்டு காசோலைகள் வரையப்பட்டிருந்தன. ஆகையால், அந்த விநியோகஸ்தர்களால் கொடுப்பனவுகள் திருப்திகரமாக பெறப்பட்டிருந்தனவா என கணக்காய்வில் திருப்திகரமாக மதிப்பிட முடியாதிருந்தது.

### 3.11 அதிகாரமின்றிய கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கண்டாவளை பிரதேச செயலகப் பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தால் மக்கள் பாதிக்கப்பட்டு 2014 திசெம்பரில் 04 நாட்கள் தொடக்கம் 10 நாட்கள் வரையான காலவீச்சில் 08 நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,364,985 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகள் 2011 யூன் 14 இன் 152 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கைக்கு முரணாக மாவட்டச் செயலாளரிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பல்வேறு உருப்படிகளின் கொள்வனவுகளிற்கு ரூபா 1,364,985 கூட்டுமொத்தமான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 3.12 முகாமைத்துவப் பலவீனங்கள்

கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட முகாமைத்துவப் பலவீனங்களுடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) ரூபா 2,192,000 இற்கான பெறுமதியுடைய ஊட்டச்சத்து கூப்பன்கள் கரைச்சிப் பிரிவில் கற்பிணித் தாய்மார்களுக்கான பொருட்கள் வழங்கப்படும் நேரத்தில் இரத்துச்செய்யப்படாமல் விநியோகிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு நேரத்தில் வரிச் சிட்டைகள் மற்றும் அவைகளின் வற் பதிவுகளின் செல்லுபடியாகும் தன்மை என்பவற்றை பரிசீலனை செய்யாமல் ஒப்பந்தகாரரிற்கு ரூபா 1,420,758 கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரிக்கான கொடுப்பனவு மாவட்டச் செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.13 மேலதிகக் கொடுப்பனவு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மாவட்டச் செயலகம் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்துடன் உடன்படிக்கையொன்றை மேற்கொண்டிருந்ததுடன் கண்டாவளை பிரதேச செயலகத்தின் நிர்மாண வேலைகளிற்காக 2014 யூலை 03 இல் ரூபா 13.475 மில்லியன் பெறுமதிக்கு ஒப்பந்தமொன்றை வழங்கியிருந்ததுடன் ஒப்பந்தத்திற்காக மதியுரைக் கட்டணமாக செலுத்த வேண்டிய ரூபா 1.288 மில்லியன் செலுத்துவதற்குப் பதிலாக மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு ரூபா 3.775 மில்லியன் மதியுரைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. அதன் விளைவாக ரூபா 2.487 மில்லியன் மேலதிகக் கொடுப்பனவு கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது.

**3.14 நட்டங்களும் சேதங்களும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெவ்வேறு காரணங்களினால் ரூபா 72,963,466 கூட்டுத்தொகையான நட்டங்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருந்தன. இது தொடர்பில் கடந்த 07 ஆண்டுகளிற்கு மேலாக கணக்கிலிருந்து இந்த தொகையை சீராக்கம் செய்து தெளிவாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான 04 வாகனங்களின் நட்டப் பெறுமதி கடந்த 07 ஆண்டுகளிற்கு மேலாக மதிப்பிடப்பட்டு ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**3.15 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**செயல்நடவடிக்கைத் திட்டம்**

மாவட்டச் செயலகம் 2006 மார்ச் 24 இன் 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை.

**3.16 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

2014 ஏப்ரல் 08 இல் நடைபெற்ற பொதுக் கணக்குகள் குழுவின் 197 ஆம் கூட்டக் குறிப்பில் உள்ளடக்கப்பட்ட அவற்றின் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டிருக்காத மாவட்டச் செயலகத்துடன் தொடர்புடைய பந்திகளிற்கான தொடர்பு கீழே தரப்பட்டுள்ளன.

| கூட்டக் குறிப்புக்களுடனான தொடர்பு | | தொடர்பின் கீழான விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2014 | 10 (iv) | 04 கூட்டுறவுச் சங்கங்களிற்கு செலுத்தப்பட்ட ரூபா 7,200,000 கூட்டுத்தொகையான தீர்க்கப்படாத நிலுவை நெற் கொள்வனவு முற்பணங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் கடந்த இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக தாமதமாகியிருந்தது. |
| 2014 | 10(v) | தற்காலிக வழி அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதிலிருந்து ரூபா 6,631,171 தொகை சேகரிக்கப்பட்டிருந்ததுடன் 2014 ஏப்ரல் 08 இல் குழு விசாரணை நேரத்தில் மாவட்டச் செயலக பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கில் ரூபா 1,726,900 மீதி காட்டப்பட்டிருந்தது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் இந்த சேகரிப்புக்களை பயன்படுத்துவதன் மூலம் தனியார் பஸ் தரிப்பிடத்தை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததென பொதுக் கணக்குகள் குழுவிற்கு மாவட்டச் செயலாளர் உறுதியளித்திருந்த போதிலும் கடந்த இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.17 மனித வளங்கள் முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 23 | 14 | 09 |
| (ii) | மூன்றாம் நிலை | 14 | 1 | 13 |
| (iii) | இரண்டாம் நிலை | 341 | 223 | 118 |
| (iv) | ஆரம்ப நிலை | 99 | 52 | 47 |
| | **மொத்தம்** | **477** | **290** | **187** |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 187 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.